# கோவையில் தி.மு.க. புதிய அலுவலகக் கட்டடப் பணிகளுக்கு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார்!







கோவையில் தி.மு.க. புதிய அலுவலகக் கட்டடப் பணிகளுக்கு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அடிக்கல் நாட்டினார். இந்நிகழ்ச்சியில், முன்னாள் அமைச்சர்கள் கே.என்.நேரு, எ.வ.வேலு, வி.செந்தில்பாலாஜி, சு.முத்துச்சாமி, மு.கண்ணப்பன், பொங்கலூர் பழனிச்சாமி, மு.பெ.சாமிநாதன், அர.சக்கரபாணி, துணைப்பொதுச் செயலாளர் அந்தியூர் செல்வராஜ், மாவட்டச்செயலாளர்கள் தொண்டாமுத்தூர் ரவி, தளபதி முருகேசன், துரை செந்தமிழ்ச் செல்வன், மேயர் ரங்கநாயகி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் கணபதி ராஜ்குமார், ஈஸ்வரசாமி, பிரகாஷ், எம்.எல்.ஏ.கள் ஜெயராமகிருஷ்ணன், வசந்தம் கார்த்திகேயன், தீர்மானக்குழு செயலாளர் நா.கார்த்திக், முன்னாள் எம்.எல்.ஏ. சந்திரகுமார், தி.மு.க. மற்றும் திராவிடர் கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.

### கொலை – கொள்ளை – விலைவாசி – மின் கட்டணம் – தொழில்கள் முடக்கம்!

## எதற்குமே த.வெ.க. ஆட்சியாளர்களிடம் தீர்வு இல்லை!

### தி.மு.கழகம் வலைதளப் பதிவு!

சென்னை, நவ.5-

தி.மு. கழகம் வெளியிட்டுள்ள வலைதளப் பதிவு வருமாறு:-

**தொழில்கள் முடங்குகின்றன. வருமானம் இல்லை. விலைவாசி விண்ணை தொடுகிறது. தினசரி கொலை சம்பவங்கள் அதிகரித்துக் கொண்டேயிருக்கின்றன. நிறுவனங்கள் ஆந்திராவுக்கு செல்கின்றன. மின்கட்டணம் கழுத்தை நெரிக்கிறது. எதற்குமே இன்றைய த.வெ.க. ஆட்சியாளர்களிடம் தீர்வு இல்லை.**

**ரோடு ஷோ நடத்துகிறார்கள் அதுவும் மக்களுக்கு சலித்துவிட்டது. நேற்று பெருந்துறையில் அட்டர் ப்ளாப். வேறு வழி தெரியாமல் ஆட்சி கவிழ்ப்பு என்ற பழைய பல்லவியை தூக்கி கொண்டு வருகிறார் கலைக்சன் குமார்.**

**போலீஸ் உங்களிடம் இருக்கிறது; சி.பி.சி.ஐ.டி. உங்களிடம் இருக்கிறது. நடவடிக்கை எடுங்கள். யார் தடுத்தார்கள்?**

**அ.தி.மு.க. ஆட்களை எல்லாம் இழுத்து குதிரை பேரம் நடத்திவிட்டு திமுகவினரை குதிரை பேர வழக்கில் தேடுகிறோம் என்று ஒரு மாதத்தை ஓட்டினார்கள். கிணற்றில் போட்ட கல்லாக அதில் ஒரு முன்னேற்றமும் இல்லை. இப்போது மீண்டும் அதே கதை. அதே பிரேக்கிங் நியூஸ். இன்னொரு மாதத்தை ஓட்டலாம் என்று திட்டமா?**

**பண்டிகை காலத்தில் மக்கள் வேதனையின் உச்சத்தில் இருக்கிறார்கள். கொஞ்சமாவது அவர்களை குறித்து சிந்தியுங்கள். வெறும் பரபரப்பான செய்திகளை ஊடங்களுக்கு கொடுத்து கொண்டேயிருந்தால்**




**வீடுகளில் உலை பொங்காது.**

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### ரூபாய் 5000 கோடி மோசடி வழக்கில் – த.வெ.க.வுடன் தொடர்புடைய

## பிரேம்குமாருக்குச் சொந்தமான இடங்களில் சோதனை!

### அமலாக்கத்துறையினர் நடவடிக்கை!

*சென்னை, நவ.5-*

*5 ஆயிரம் கோடி ரூபாய் மோசடி வழக்கில் பிஎல்எம் ஹவுசிங் மற்றும் கிரெடிட் சொசைட்டி தலைவர் பிரேம்குமார் தொடர்புடைய இடங்களில் அமலாக்கத்துறையினர் சோதனை நடத்தி வருகின்றனர்.*

*முதியவர்கள் மற்றும் பொதுமக்கள் முதலீடு செய்த டெபாசிட் தொகைகளுக்கு அதிக வட்டி தருவதாகக் கூறி ஏமாற்றியதாகவும், அந்தப் பணத்தை முதலீட்டாளர்களுக்குத் திருப்பித் தராமல் தனது சொந்த கணக்குகளுக்கும், உறவினர்களின் கணக்குகளுக்கும் திசைதிருப்பியதாகவும் பிஎல்எம் ஹவுசிங் மற்றும் கிரெடிட் சொசைட்டி தலைவர் பிரேம்குமார் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.*

*காஞ்சிபுரத்தில் சுமார் 300 ஏக்கர் நிலம் வாங்கியது, ஹோட்டல்கள், ரிசார்ட்டுகள், திரையரங்குகள் உள்ளிட்ட தொழில்களில் முதலீடு செய்தது, தமிழக கேபிள் டிவி நிறுவனத்துக்கு 16 கோடி ரூபாய் பணப் பரிமாற்றம் செய்தது உள்ளிட்டவை குறித்தும் கேரள குற்றப்பிரிவு போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.*

*இந்த வழக்கு தொடர்பாக கேரள பொருளாதார குற்றத்தடுப்பு போலீசார் சென்னையில் வைத்து கடந்த அக்டோபர் 29 அன்று பிரேம்குமாரை கைது செய்தனர். இதன் தொடர்ச்சியாக பிரேம்குமார் மீது அமலாக்கத்துறையும் வழக்குப்பதிவு செய்து விசாரணையைத் தீவிரப்படுத்தியுள்ளது.*

*இந்நிலையில், சென்னையில் பிரேம்குமார் தொடர்புடைய இடங்களில் அமலாக்கத்துறை அதிகாரிகள் சோதனை நடத்தி வருகின்றனர். கடந்த ஜூலை 2026ல் பிரேம்குமார் தமிழக முதல்வர் விஜய்யைச் சந்தித்த புகைப்படம் வெளியானது. மேலும், பிரேம்குமாருக்குச் சொந்தமான நிறுவனத்தின் பேருந்துகள் தவெகவின் பல்வேறு நிகழ்ச்சிகளுக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன. சட்டமன்றத் தேர்தல் முடிந்து சட்டமன்றத்தில் நடைபெற்ற நம்பிக்கை வாக்கெடுப்பின் போது, தவெக சட்டமன்ற உறுப்பினர்கள், பிரேம்குமாருக்குச் சொந்தமான பேருந்துகளிலேயே அழைத்து வரப்பட்டது குறிப்பிடத்தக்கது.*

**ஓய்.பி.எம். பாலாஜி அலுவலகத்திலும் சோதனை!**

*இதனிடையே முதலமைச்சர் விஜய் முதல், அமைச்சர்கள் வரை நெருங்கிய தொடர்புடைய ஓய்.பி.எம். பாலாஜியின் கோயம்பேடு அலுவலகத்திலும் அமலாக்கத்துறையினர் சோதனை நடத்தி வருகின்றனர். 5 ஆயிரம் கோடி ரூபாய் மோசடி வழக்கில் கைது செய்யப்பட்டுள்ள பிரேம்குமாரின் தொழில் பங்குதாரராக இருப்பவர் ஓய்.பி.எம். டிரான்ஸ்போர்ட் நிறுவன உரிமையாளர் பாலாஜி என்பது குறிப்பிடத்தக்கது.*

